பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 191** **நாள்: 24.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மெரினா கடற்கரையில் சிறு கடைகளை முறைபடுத்தும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களும் மாநகர காவல் ஆணையாளர் திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தேனாம்பேட்டை மண்டலம் –9 மெரினா கடற்கரையில் உள்ள சிறு கடைகளை முறைப்படுத்தி கடற்கரையை சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் பராமரிக்கும் வகையில் ஒரே இடத்தில் முறைபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை இன்று (24.11.2018) பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., அவர்களும், மாநகர காவல் ஆணையாளர் திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**பின்னர் செய்தியாளர்களிடம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது.**

மெரினா கடற்கரையில் சுமார் 1900 சிறு கடைகள் அங்காங்கே உள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மெரினா கடற்கரையை சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் பேணிகாக்கும் வகையில் இக்கடைகளை முறைபடுத்தி ஒரே நேர் கோட்டில் பொதுமக்கள் அனுக ஏதுவாகவும், தூய்மை பணிகளை செவ்வனே செய்து கடற்கரையை மாசுபடாமல் பாதுகாக்கும் வகையிலும் முறைபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

களங்கரை விளக்கம் முதல் அண்ணா சதுக்கம் வரை உள்ள 2.8 கீ.மி நீளத்திற்கு இக்கடைகள் முறைபடுத்தபட்டுள்ளன. இக்கடைகள் கடற்கரை அனுகு சாலையிலிருந்து 25 அடி இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் மற்றும் வணிகர்களின் பாதுகாப்பிற்காக இவ்விடங்களில் கூடுதலாக உயர் கோபுர மின் விளக்குகளும் கண்காணிப்பு கேமிராக்களும் அமைக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

**மாநகர காவல் ஆணையாளர் திரு. ஏ.கே. விஸ்வநாதன்,இ.கா.ப., அவர்கள் தெரிவித்ததாவது.**

உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரையை பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயனிகள் கண்டுகளிக்கும் வகையில் இங்குள்ள சிறு கடைகளை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநகர காவல்துறை இணைந்து முறைபடுத்தி வருகிறது. மெரினா கடற்கரைக்கு வரும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ரோந்து காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மேலும் மெரினா கடற்கரையில் அங்கேங்கே சிறு கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் பாதுகாப்பு கண்காணிக்கப்படும் என மாநகர காவல் ஆணையாளர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி. லலிதா,இ.ஆ.ப.,அவர்கள், மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (தெற்கு) திரு, மகேஷ்குமார் அகர்வால் இ.கா.ப., இணை ஆணையாளர் (கிழக்கு) திரு. அன்பு இ.கா.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி. திவ்யதர்ஷினி இ.ஆ.ப., டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., காவல் துணை ஆணையாளர்கள் திரு. மயில்வாகனன் இ.கா.ப., திரு. ஸ்ரீஅபிநவ் இ.கா.ப., முதன்மை தலைமை பொறியாளர் திரு. புகழேந்தி, தேனாம்பேட்டை மண்டல அலுவலர் திருமதி. அனிதா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**